மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.205/2022</u>

2026ம் ஆண்டு மார்ச் 03ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>03.03.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதிகள் பூமி நால்ரோடு கிராமம் 883/ஏ5 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி பூமிக்கு தென்புறத்தில் தான் தாவா சொத்தான 886 காலை அமைந்துள்ளதா என்றால் ஆமாம். வாதிகள் பூமிக்கு கீழ்ப்புறத்தில் தாவா சொத்தான 882 மற்றும் 887 ஆகிய பூமிகள் அமைந்துள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதி 883/ஏ5 சொத்திற்குள் நான் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என என் மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 21/2022 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம்.

2. ஆனால் நாங்கள் அவரை இடைஞ்சல் செய்யவில்லை அவர் தான் எங்கள் இடைஞ்சல் செய்தார். அந்த வழக்கில் வாதி கோரியபடி அந்த வழக்கில் தீர்ப்பானது என்றால் ஆமாம். அந்த தீர்ப்பை ஆட்சேபனை செய்து நாங்கள் மேல் முறையீடு ஏதேனும் செய்துள்ளோமா என்றால்

இல்லை. நால்ரோடு கிராமம் க.ச.எண்.886, க.ச.எண்.882 மற்றும் க.ச.எண்.887 ஆகிய காளைகளை பொருத்து நாங்கள் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான்.

3. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் க.ச.எண்.885 பூமியின் வடக்கோட்டிலும் க.ச.எண்.887 பூமியின் மேற்கோட்டிலும் தடம் இருப்பதாக நாங்கள் ஆணையரை அழைத்துச் சென்று காட்டினோமா என்றால் இல்லை அந்த தடம் எங்கள் பூமியில் நாங்கள் எங்களுக்குள் அமைத்துக் கொண்டுள்ளோம். மேற்படித்தடம் வருவாய் துறையில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை நாங்கள் பிரதிவாதியின் பூமியான 883/ஏ 5 பூமியில் தடம் உள்ளதாக தான் இந்த வழக்கை போட்டுள்ளோம் என்றால் இல்லை அவர்தான் எங்கள் தடத்தை இடைஞ்சல் செய்கிறார்.

4. நாங்கள் எங்கள் வழக்குறையில் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்து நாளது தேதி வரை எவ்வித இடையூறும் இல்லாமல் தாவா தடத்தை அனுபவம் செய்து வருவதாக நாங்கள் சொல்லி உள்ளோம் என்றால் தடம் அனுபவிப்பது சம்பந்தமாக எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வடபுற அத்து வேலி போடப்பட்டு அது நாளது தேதி வரை நிலையில் உள்ளது என்றால் அத்துவேலி எதுவும் இல்லை.

5. பிரதிவாதிகள் அவர்கள் பூமியில் தென்புறம் கிழமேல் ஆகவும் கிழப்புறம் தென்வடலாகவும் அதில் கம்பி வேலி அமைத்திருந்தார்கள் என்றும், அதை நாங்கள் சேதப்படுத்தியதால் குற்றவியல் வழக்குகள் நடந்து வருகிறது என்று சொன்னால் நாங்கள் சேதப்படுத்தவில்லை

அங்கு கம்பி வேலியே இல்லை. ரீ.ச.எண்.883/ஏ 5 பூமியில் எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது என்றால் இல்லை. மேற்படி பூமிக்கு மேல் புறத்தில் 883/ஏ 4 ல் ஒரு லோகநாதன் என்பவர் கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் சரிதான்.

6. லோகநாதன் அவரது பூமியில் நான்கு பக்கமும் கம்பி வேலி போட்டுள்ளார் என்றால் சரிதான். ரீ.ச.எண்.886 மற்றும் 887 ஆகிய பூமிகளில் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாத்தியமும் இல்லாததால் அவர்கள் அந்த பூமிக்குள் வந்து எங்களை எந்த இடையூறும் செய்யவில்லை என்றால் அதில் செல்லும் தடத்தை பொறுத்து இடைஞ்சல் செய்கிறார்கள். பிரதிவாதிகள் தாவா சொத்தை இடைஞ்சல் செய்தது குறித்து காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அது சம்பந்தமாக பைசல் ஏதேனும் நடைபெற்றதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எந்த தேதியில் என்னை இடைஞ்சல் செய்தார்கள் என்று என்னால் தற்போது சொல்ல முடியாது என்றால் தேதி சொல்ல முடியாது.

7. 10.09.2022 இல் தாவா சொத்தை பொறுத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் நடைபெறவில்லை. ரீ.ச.எண்.586 பூமிக்கு மேல் புறத்தில் 885 குப்பக்கவுண்டன் வலசு ஊர் நத்தம் உள்ளது என்றால் ஆமாம். ஊர் நத்தத்தை ஒட்டிதான் கிழப்புறத்தில் எனக்கு பூமிகள் உள்ளது என்றால் சரிதான். முந்தைய சட்டமன்றத் தேர்தலில் நானும் மற்ற பிரதிவாதிகளும் எந்த போட்டியும் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. அதனால் எங்களுக்குள் எந்தவித வருத்தமும் கிடையாது என்றால் சரிதான். நாங்கள் தான் பிரதிவாதி பூமியின் தென்புற அத்தில்

கிழமேலாக இருந்த கம்பி வேலியையும், கிழப்புற அத்தில் தென்வடலாக இருந்த கம்பி வேலியையும் சேதப்படுத்தி பிரதிவாதியின் பூமிக்குள் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்ததால் அ.வ.எண்.21/2022 என்ற வழக்கை பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கடந்த 27.10.2025 இல் தீர்ப்பு பெற்றுள்ளார் என்றும், நான் பொய்யாக வழக்கு மூலமே இல்லாத இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் நடைபெறாத காரணங்களை பொய்யாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.03 18:43:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்